DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

SESSIONS CASE No: 126/16

Deposition of Witness for : P.W.

| | | | |
|---|---|---|---|
| Name | : வனிதா | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16.06.2023.

**1 , 2, 3 Accused present.**

**முதல் விசாரணை –**

**(எதிரி ஆஜர். இன்றைய தினம் LW 25 அரசு தரப்பு சாட்சி 13 ஆக விசாரிக்கப்பட்டார்)**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது நாமக்கல் மாவட்டம் மோகனூர்வட்டம் மாடகாசம்பட்டி விஎஓ வாக வேலை செய்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் அலங்கியம் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வந்தேன். கடந்த 10.02.2015 அன்று நானும் எனது கிராம உதவியாளர் ராமசாமி என்பவரும் அலுவலகத்தில் காலை சுமார் 10மணிக்கு பணியில் இருந்தபோது தாராபுரம் வட்ட காவல் ஆய்வாளர் எங்கள் அலுவலகத்திற்கு வந்து அலங்கியம் கா.நி.கு.எண்.64/2015 என்ற கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நபர் அலங்கியம் ஆற்று பாலம் அருகில் வருவதாக தனக்கு தகவல் கிடைத்து இருப்பதாகவும் அதற்காக என்னையும் உதவியாளரையும் மேற்படி காவல்ஆய்வாளர் அழைத்ததன் பேரில் ஆற்றுப்பாலம் அருகே

சென்றபோது சிறிது நேரத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில் ஒரு நபர் வந்து கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது தனது பெயர் கார்த்திக் என்கிற ஆனந்த்பாபு என்றும், ( சாட்சி 2வது எதிரியை அடையாளம் காட்டினார்) தனது சின்னம்மா முத்துலெட்சுமி மகன் சேகர் என்கிற சந்திரசேகர் என்றும் ( சாட்சி 1வது எதிரியை அடையாளம் காட்டினார்) பாலாஜி என்கிற பாலசுப்ரமணியத்தின் மனைவி மகேஸ்வரி என்றும் ( சாட்சி 3வது எதிரியை அடையாளம் காட்டினார்) ஆகியோர் ஏற்கனவே திட்டமிட்டு இருந்த படி கடந்த 3.2.2015 அன்று குறிச்சிகோட்டை பாலாஜி என்ற பாலசுப்ரமணியத்தை பாறையூர் அருகே அமைந்துள்ள துங்காவி பகுதியில் அமைந்துள்ள அமராவதி வாய்க்கால் 55 வது மடை அருகே பாலாஜி என்ற பாலசுப்ரமணியத்தை அழைத்து சென்று மது ஊற்றி கொடுத்து வாழைப்பழத்தில் குருணை மருந்து மற்றும் சல்பாஸ் மாத்திரை கலந்து பாலாஜி என்ற பாலசுப்ரமணியத்திற்கு கொடுத்து அவர் வாந்தி எடுத்ததும், சேகர் என்ற சந்திரகேசர் (1வது எதிரி) தனது பைக்கில் வைத்திருந்த அருவாளை எடுத்து பாலாஜி என்ற பாலசுப்ரமணியத்தின் பின்தலையில் வெட்டியும், தனது பைக்கில் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியால் அடித்தும், தனது வண்டியின் டேங் கவரில் வைத்திருந்த கன்றுக்குட்டிக்கு கட்டும் மூக்கணாங்கயிறு எடுத்து பாலாஜி என்ற பாலசுப்ரமணியத்தை ஆளுக்கு ஒரு பக்கமாக இறுக்கியும், அவர் மூச்சு பேச்சு இல்லாமல் போகவே அவரை அருகில் இருந்த அமராவதி வாய்க்காலில் போட்டு விட்டு கீழே கிடந்த ரத்தக்கறையை மண்ணால் மூடி சல்பாஸ் மற்றும் குருணை மருந்தை ஆற்றில் வீசியும் சென்றதாக தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கார்த்திக் என்கிற ஆனந்த்பாபு என் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் முன்னிலையிலும் கொடுத்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளர் ராமசாமியும் கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அசாஆ.12.** அதன் பின்னர் கார்த்திக் என்கிற ஆனந்த்பாபு என்னையும், உதவியாளர், காவல் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்களை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார். அங்கு அவர் கொலை செய்ய பயன்படுத்திய இரும்பு கம்பியையும், தான் அணிந்திருந்த ரத்தக்கறை படிந்த அரைக்கை சட்டையையும் எங்கள் முன் ஆஜர் படுத்தினார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் இரும்பு கம்பியை தான் 1வது எதிரி மேற்படி சமயத்தில் போலீசாரிடம் ஆஜர்படுத்தினார். மேற்படி இரும்பு கம்பி, அரைக்கை சட்டையை கைப்பற்றியபோது போலீசார் என்னிடமும் ராமசாமியிடமும் கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அசாஆ.13.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பணிபுரியும் அலுவகத்திற்கும் 2வது எதிரியை சந்தித்தாக சொல்லும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 கிமீ தூரம் இருக்கும். என்னை யார் எல்லாம் வந்து அழைத்து சென்றார்கள் என்றால் காவல்ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்கள் அழைத்து சென்றார்கள். நான் போலீஸ் வாகனத்தில் சென்றுவிட்டேனா என்றால் இல்லை. எனது உதவியாளர் வாகனத்தில் சென்றேன். 1முதல் 3 எதிரிகளை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியாது. நான் சென்றபோது 3எதிரிகளும் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. 2வது எதிரி கார்த்திக் என்ற ஆனந்த்பாபு மட்டும் அங்கு இருந்தார். அதன்

பிறகு எப்போது காவல்நிலையம் சென்றோம் என்றால் மாலை காவல்நிலையம் சென்றோம் காவல்ஆய்வாளர் என்னை விசாரணைக்கு அழைத்து இருந்தார் என்றால் ஆமாம். காவல்நிலையத்தில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார் என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலத்தை 2வது எதிரி 2மணி நேரம் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தார். அப்போது நான் உடன் இருந்தேன் என்றால் ஆமாம். 2வது எதிரி எந்த திசையில் இருந்து வந்தார் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் எனது கிராம உதவியாளர் பெயரை சுப்ரமணி என்று சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி 161 வாக்குமூலத்தை படித்து பார்த்து விட்டு சுப்ரமணி என்று தான் உள்ளது, ஆனால் ராமசாமி என்று தான் சொன்னதாக சொல்கிறார். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் யார் எழுதியது என்று சரியாக ஞாபகமில்லை. காவல் ஆய்வாளர் 2வது எதிரியை பற்றி மட்டும் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். மற்ற எதிரிகளை பற்றி தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யவில்லை என்றாலும் உண்மையில் என் முன்னிலையில் தயார் செய்திருந்தால் கிராம உதவியாளர் பெயரை சுப்ரமணி என்று சொல்லியிருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் டைப் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் ஆனால் போலீசார் அந்த ஆவணத்தை எழுதியதாக சொல்வதில் இருந்தே அந்த ஆவணம் தயாரிக்கும் போது நான் உடன் இருக்கவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் சட்டையையும், இருமபு கம்பியையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு என் முன்னிலையில் கம்பி கைப்பற்றி இருந்தால் கம்பி நீள அகலத்தையும், மற்றும் கம்பி தன்மையையும், மற்றும் சட்டையின்

நிறத்தை பற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பெறவில்லை என்றாலும், மகஜர் தயாரிக்கவில்லை என்றாலும், சான்று பொருட்கள் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 வது மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/வி.பி.சுகந்தி

கூடுதல் மாவட்ட நீதிபதி

உடுமலைபேட்டை (பொறுப்பு)